அமைச்சரிடம் கேள்வி போட வேண்டும். நான் குடிசைமாற்று வாரியம் சம்பந்தப்பட்ட கேள்விக்குத்தான் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி குடிசைமாற்று வாரியம் பற்றியதால் இந்த அளவுக்குத்தான் பதில் எதிர்பாக்க முடியும்.

அம்மைநாயக்கனூர் பேரூராட்சிக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1088—திருமதி ஏ. எஸ், பொன்னம்மாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்மைய நாயக்கனூர் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(இ) அம்மைய நாயக்கனூர் பேரூராட்சியில் இணைந்துள்ள கிராமங்கள் அனைத்திற்கும் இத்திட்டத்தின் மூலம் குடி தண்ணீர் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) திட்ட வேலைகள் முடிவு பெறும் நிலையில் உள்ளன.

(ஆ) 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப் பட்டது.

(இ) அம்மாபட்டி, மாவுத்தன்பட்டி, கோடைரோடு, ஜகன்னாதபுரம், சொக்கலிங்கபுரம், புதூர், அம்மை நாயக்கனூர் மற்றும் இடையப்பட்டி ஆகிய ஏழு குடியிருப்புகளுக்கு மட்டும் குடி தண்ணீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அம்மை நாயக்கனூர் பேரூராட்சியில் 19 'ஹாம்லெட்'கள் இருக்கின்றன. அந்த 19—ல் வெறும் ஏழை மட்டும் எடுத்துக் கொண்டால் பாக்கி பேர்கள் தண்ணீர் இல்லாமல் என்ன செய்வார்கள்? அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவ்ரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் நீர் எடுத்துச்செல்லும் குழாய் செல்லும் வழியில் 'வே சைடு வில்லேஜஸ்' என்ற அளவில் கீழ்க்கண்ட குடியிருப்புகளுக்கு மட்டும் தற்போது குடிநீர் வழங்க வழிவகைச்

செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அந்தக் குடியிருப்புகள், அம்மாபட்டி, மாவுத்தன்பட்டி, கோடைரோடு, ஜகன்னாதபுரம், சொக்கலிங்கபுரம் புதூர். அம்மையநாயக்கனூர் மற்றும் இடையபட்டி ஆகியவை. மற்ற கிராமங்களில் இருப்பவர்கள் இதுவரை என்ன செய்துகொண்டிருந்தார்களோ அதையே செய்ய வேண்டும். மேல் முறையீடு செய்தால் அது பற்றி பின்னால் கவனிக்கலாம்,

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, ஒரே பேரூராட்சிக்கு உட்பட்ட கிராமங்கள்தான் அத்தனையும். நாம் 'வாட்டர்' கொடுக்காமல் 'வாட்டர் செஸ்' என்று வசூல் செய்கிறோம். அப்படிச் செய்யும்போது நல்ல தண்ணீர் கொடுக்காமல் மற்ற கிராமங்களை ஒதுக்கிவைத்தால் அந்த மக்களுடைய வெறுப்பை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுமா? அவர்களுடைய வெறுப்பை ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறதா? ஆகையால் மறுபரிசீலனை செய்து அனைத்துக் கிராமங்களுக்கும் நல்ல தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? நிலக் கோட்டையிலிருந்து தண்ணீர் வருகிறது. அந்த வழியில்தான் சிலுக்கார்பட்டி பஞ்சாயத்து இருக்கிறது. ஆகவே, அதையும் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே மக்கள் யாரும் இந்த அரசை கோபித்துக்கொள்ள மாட்டார்கள். காரணம் சுதந்திரம் அடைந்து இதுவரையில் அந்த இடம் இப்படியே இருக்கிறது. ஆகையால் புரட்சித் தலைவர் என்ன றக்காவது செய்தால் போதும் என்று இருக்கிறார்கள். 1976 ஆம் ஆண்டு 26.40 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப் பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் அந்தக் காலத்தில் போடப் பட்டது. 'வே சைடு வில்லேஜஸ்' என்ற முறையில் அந்தத் திட்டத்தின் பைப் லைனை ஒட்டி இருக்கிற கிராமங்களுக்குத் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்றால் 26.40 இலட்சத்திற்கு மேல் போகும். வேண்டுமென்றால் கீழ்க் குழாய் வைக்க வேண்டிய 'ஆகுமென்டேஷன் ஸ்கீம்' போடலாம். அதைப் பின்னால் பரிசீலிக்கலாம்.

சென்னையிலுள்ள செங்கற்பட்டு மாவட்ட மண்டலத்துணை இயக்குநர் அலுவலகம்.

வினா எண் 1089— திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம்; மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தை (நகர் ஊரமைப்புத் துறை) காஞ்சிபுரத்திற்கு மாற்ற வேண்டுமென கோரிக்கை உள்ளதா?